**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 05/2024**

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11–ம் நாள் வியாழக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 11.09.2025 | தகப்பனார் பெயர்: | கேசவன் |
| பெயர்: | நல்லரசன்<br>(PW– 1 Chief.con ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | அளக்குடி | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 45/2025 |

<u>**முதல் விசாரணை தொடர்ச்சி : 11.09.2025**</u>

1. 28.07.2008 தேதியிட்ட பிச்சம்மாள் செந்தாமரைக்கண்ணனுக்கு எழுதிவைத்த உயில் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (அசல் உயில் தாக்கல் செய்யாததால் பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்ய ஆட்சேபனை செய்யப்பட்டது, ஆட்சேபனையானது தீர்ப்பின் போது பரிசீலனை செய்யப்படும்)

நான் செந்தாமரைக்கண்ணனிடமிருந்து தாவா சொத்தை கிரயம் செய்ததால் மேற்கண்ட ஆவணத்தை தாக்கல் செய்கிறேன்.

மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.